<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

**நாள்** 02.09.2025

**அசல் வழக்கு எண்.150/2015**

**வா.சா.1 – சத்தியவேல், த/பெ.ஆறுமுகம்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

<u>**குறுக்கு விசாரணை**</u>

இந்த வழக்கு தாக்கல் செய்த காமாட்சி, பாக்கியம் யார் தெரியுமா என்றால் காமாட்சி என்னுடைய பெரியம்மா பாக்கியம் என்னுடைய சித்தி ஆவார். உங்களுடைய அம்மா பெயர் என்ன என்றால் அவருடைய பெயர் கோவிந்த அம்மாள் ஆகும். காமாட்சி அம்மாள், பாக்கியம், கோவிந்தம்மாள் ஆகிய மூவரும் என்ன உறவு என்றால் உடன் பிறந்தவர்கள் ஆவார்கள். கோவிந்தம்மாள் எப்பொழுது இறந்துவிட்டார் என்றால் 2012 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். கோவிந்தம்மாள் என்பவரது வாரிசுகள் யார் என்றால் முதலில் சாந்தி இரண்டாவது சரஸ்வதி மூன்றாவது சரளா நான்காவது ஏ சத்திய வேல் என்கிற நான். ஒன்று முதல் நான்கு பிரதிவாதிகள் கோவிந்தம்மாள் என்பவரது வாரிசு என்றால் சரிதான். வாதிகளுடன் பிறந்த மற்றொரு சகோதரி யார் என்றால் லட்சுமி என்பவர் ஆவார். லட்சுமி இறந்துவிட்டார் அவரது வாரிசுகள் யார் என்றால் தெய்வானை பெருமாள், சுமதி ஆகியோர் ஆவர். கன்னியப்பன் யார் என்றால் லட்சுமி அம்மாள் என்பவரது கணவராவார். 5 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் இறந்து போன லட்சுமி அவர்களது வாரிசுகள் என்றால் சரிதான். வாதிகளின் அப்பா பெயர் என்ன என்றால் செங்கல்வராயன் ஆகும். வாதிகளின் அம்மா பெயர் என்ன என்றால் அபூர்வ அம்மாள் அவார். செங்கல்வராயன் மற்றும் அபூர்வம்மாள் உங்களது தாத்தா மற்றும் பாட்டியாவார் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் என்னுடைய தாய் வழி தாத்தா பாட்டி ஆவார். உங்கள் தாத்தா செங்கல்வராயன் என்பவருக்கு சொத்து இருந்ததா என்றால் இருந்தது. முத்துவேடு கிராமத்தில் இருந்தது. 1 ஏக்கர் 34 செண்டு இருந்தது. அந்த சர்வே எண் தெரியாது என்றால் 102, 103, 104 ஆகியவை ஆகும். அந்த சொத்தினை அவர் இறக்கும் வரை அனுபவித்து

வந்தார் என்றால் சரியில்லை அவர் கிருஷ்ணன் ஆறுமுகம் ஆறுமுகம் ஆகியோருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் தங்கை பிள்ளைகள் என்பதால் எழுதிக் கொடுத்தார். அவரது நான்கு மகள்களுக்கு எழுதிக் கொடுக்காமல் தங்கச்சி மகனுக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படுகின்ற நீங்கள் தாக்கல் செய்த முதலாவது ஆவணம் உங்கள் தாத்தா எழுதிய செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். அதற்கு போதிய பதிவு கட்டணமும் செலுத்தவில்லை என்றால் சரிதான். அதில் எழுதி வாங்கியவர்கள் செங்கல்வராயன் பிள்ளைகள் எழுதிக் கொடுத்தவரும் செங்கல்வராயன் என்றால் சரிதான். மேற்படி இரண்டு செங்கல்வராயினும் வெவ்வேறு நபர்கள் என்றால் சரிதான். எழுதிக் கொடுத்த செங்கல்வராயன் பெரும்பாக்கத்தில் இருக்கிறார் என்றால் சரிதான். பெரும்பாக்கத்தில் பக்கத்தில் தான் முத்துவேடில் நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் எப்படி வந்தது என்று சொத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரி இல்லை. நீங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள தான பத்திரம் பதிவு செய்யப்படவில்லை ஸ்டாம்ப் கட்டவில்லை ஆகவே பத்திரம் அமலுக்கும் ஆச்சாரத்திற்கும் வராது என்றால் சரியில்லை. செட்டில்மெண்ட் பத்திரம் நீங்கள் வழக்கிற்காக தயார் செய்தது இவ்வாறு எந்த பத்திரமும் எழுதவில்லை என்றால் சரியில்லை. பத்திரம் தாள்கள் எங்கு வாங்கப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது. அதில் யார் யார் சாட்சிகள் போட்டார்கள் தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் தாத்தா செங்கல்வராயன் மற்றொரு செங்கல்வராயன் பிள்ளைகளுக்கு எந்த ஒரு ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியில்லை. நீங்கள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 780/2004 என்ற வழக்கில் வாதிகள் ஒரு தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் லட்சுமி அம்மாள் வாரிசுகளும் கோவிந்தம்மாள் வாரிசுகளும் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கு கிருஷ்ணன் மற்றும் ஆறுமுகம் இரண்டு சகோதரர்களுக்கு இடையே நடைபெற்றது என்றால் சரிதான். அதனுடைய வழக்குரை நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். கிருஷ்ணனுக்கு எப்படி சொத்து வந்தது என்கிறது விவரம் டிகிரியில் இல்லை என்றால் சரி இல்லை. அண்ணன் தம்பிகள் கூட்டாக ஏமாற்றி நீதிமன்றத்தை ஏமாற்றி டிகிரி வாங்கிக் கொண்டீர்கள் என்றால் சரியில்லை. மேற்படி டிகிரியில் உள்ள சொத்துக்கள் கிருஷ்ணன் என்பவருக்கு பாத்தியதை இல்லை என்று சொன்னால் சரி இல்லை. வழக்கு சொத்து வாதியின் தந்தையான செங்கல்வராயன் என்பவருக்கு பாத்தியமானது என்றால் சரியில்லை. நீதிமன்றத்தை ஏமாற்றி கூட்டாக தீர்ப்பு பெற்றுக் கொண்டீர்கள் என்றால் சரியில்லை. மற்றவர்களுடைய சொத்தை நீங்கள் அவ்வாறு செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. அதேபோல் நீதிமன்றத்தை ஏமாற்றி இறுதி நிலை தீர்ப்பாணை பெற்றுள்ளீர்கள் என்றால் சரியில்லை. இறுதிநிலை தீர்ப்பாணையில் வாதிகளோ அல்லது செங்கல்வராயன் வாரிசுகளோ யாரும் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரியில்லை. ஆகவே இறுதிநிலை தீர்ப்பணை வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரி இல்லை. கிருஷ்ணனும் ஆறுமுகமும் சதி செய்து கூட்டாக நீதிமன்றத்தை ஏமாற்றி பெற்ற ஆவணம் என்றால் சரி இல்லை. நிறைவேற்றுகை மனுவில் வாதிகள் ஒரு தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி நிறைவேற்றுகையை மனுவில் மூன்றாவது நபர் அல்லது வாதி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிருஷ்ணனும் ஆறுமுகம் வேண்டுமென்றே நிறைவேற்றுக் மனுவில் சுவாதீனம் பெற்றுக் கொண்டார்கள் அது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியில்லை. ஆகவே அந்த வழக்கில் வழங்கப்பட்ட டிகிரி, இறுதிநிலை தீர்ப்பாணை, நிறைவேற்று மனு ஆகியவை வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியில்லை. நீங்கள் கிருஷ்ணன் என்பவரிடமிருந்து வாங்கியதாக கூறும் ஆவணமும் இல்லா நிலையது என்றால் சரியில்லை. வழக்கு சொத்து செங்கல்வராயன் பெயரில் பட்டா எண் 42 ல் வருகிறது என்றால் சரிதான். காமாட்சி, பாக்கியம், அபூர்வம்மாள், லட்சுமி ஆகியோர் பெயரிலும் வருகிறது. வழக்கு சொத்து முதல் ஐட்டம் மட்டும் வருகிறது என்றால் சரிதான். இரண்டாவது மற்றும் மூன்றாவது ஐட்டம் சொத்துக்கள் உங்கள் தாத்தா செங்கல்வராயன் ஆகியோர் பெயரில் வருகிறது என்றால் சரிதான். இரண்டாவது மூன்றாவது ஐட்டம்

சொத்துக்கள் கிருஷ்ணன் என்பவரிடமிருந்து வாங்குவதாக சொல்கிறீர்கள் கிருஷ்ணன் உயிருடன் இருக்கும் பொழுது நீங்கள் வாங்கவில்லை என்றால் சரிதான். கிருஷ்ணனுடைய வாரிசுகள் நீதிமன்றத்தை ஏமாற்றி பெற்ற ஆவணங்களை கொண்டு வருவாய் ஆவணங்களை மாற்றிக் கொண்டார்கள் என்றால் சரியில்லை. நீங்களும் கிருஷ்ணனுடைய வாரிசுகளும் சேர்ந்து கொண்டு பொய்யாக இந்த ஆவணத்தை கிரைய ஆவணத்தை உருவாக்கினீர்கள் என்றால் சரியில்லை. அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியில்லை. அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியில்லை. ஏனென்றால் அவர்களுக்கு உரிமை இல்லை என்றால் சரி இல்லை. நீங்கள் நீதிமன்றத்தையும் வருவாய் அலுவலர்களையும் ஏமாற்றி சொத்து பத்திரம் எழுதிக் கொண்டீர்கள் என்றால் சரியில்லை. வழக்கு சொத்து வாதிகள் உடைய சொத்து அவர்களுக்கு பாகம் உண்டு என்று சொன்னால் சரியில்லை. நீங்கள் கூறுவது போல் கிருஷ்ணன் ஆறுமுகம் ஆகியோருடைய தந்தை செங்கல்வராயன் அவர்களுக்கு சொத்தில் உரிமை கிடையாது என்று சொன்னால் சரியில்லை. ஆகவே வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.